1981 பிப்ரவரி 10]

திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்பட்டதற்குப் பிறகு அதிகாரிகள் அதன் பொறுப்பில் இருப்பதால், ஊராட்சி ஒன்றியத் தீர்மானத்தைப் பெறுவதற்கு முன்னால் புகையான் போன்ற கொடிய நோய்கள் பயிர்களைத் தாக்குவதைக் கருத்திற் கொண்டு, வரும் ஆண்டுகளில் வேளாண்மைத்துறைக்கு அறிவிக்கப் பட்டவுடனே நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானத்தைப் பெறுவது என்பது அவ்வளவு சிரமமான காரியமாக எனக்குத் தெரியவில்லை. அந்த விதிமுறைகளை மாற்ற உத்தேசமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, நெல் போன்ற பயிர்களுக்குப் புகையான் போன்ற வியாதிகள் அதிக அளவில் இப்பொழுது பரவிக் கொண்டிருக்கிறது. இதற்குக் காரணம் ஒரு வகையான புழுக்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தப் புழு 900 முட்டை இடுகிறது. இப்படிப்பட்ட புழுக்கள், பூச்சிகளை தவளைகள் சாப்பிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் இப்பொழுது வியாபாரிகள் போன்று இருப்பவர்கள் தவளைகளை பிடித்து வெளிநாடுகளுக்கு அனுப்பி விடுவதால் பூச்சிகள் புழுக்கள் அதிகமாகி விடுகிறது. எனவே, தவளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காகப் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து தலைவரவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பூமிதான இயக்கத்தின் கீழ் எடுக்கப்பெற்ற நிலங்கள்

* வினா எண். 269 : திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூமிதான இயக்க திட்டத்தின்கீழ் 1977 முதல் 1979 முடிய கையகப்படுத்திய மொத்தம் நஞ்சை, புஞ்சை நிலங்கள் எத்தனை ஏக்கர் ?

(ஆ) விநியோகம் செய்யப்பட்டது எவ்வளவு ?

(இ) அதற்காக ஆன செலவு எவ்வளவு ?

[1981 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நஞ்சை நிலம்—4 ஏக்கர் 37 சென்ட். புஞ்சை நிலம்—335 ஏக்கர் 95 சென்ட்.

(ஆ) 290 ஏக்கர் 32 சென்ட்.

(இ) ஒன்றுமில்லை.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத்தலைவரவர்களே, இங்கே அமைச்சரவர்கள் கூறுகின்றபொழுது, நிலம் எடுத்திருப்பதாகச் சொன்னார்கள். பூமிதான இயக்கத் திட்டம் ஏற்படுத்தப்பட்டதிலிருந்து இதுவரைக்கும் ஆதிதிராவிட மக்கள் எவ்வளவு பேர்களுக்கு அதன்மூலமாக நிலம் கொடுக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, 1—4—1980 வரையிலும் நன்கொடை பெறப்பட்ட நிலம் 23,599 ஏக்கர். அதிலே பலன் பெற்றவர்கள் 15,428 பேர். அந்த 15,428 பேர்களில் அரிசனங்கள் மட்டும் 9,693 பேர். மற்றவர்கள் 5,735 பேர்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பூமிதான இயக்கத்திற்கு எழுதி வைத்துவிட்டு, அவரவர்களே அனுபவித்து வருவதாகத் தெரிகிறது. அந்த மாதிரி நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இப்படிப் பூமிதான இயக்கத்திற்காகக் கொடுக்கப்படும் நிலங்கள் அவர்களுடைய சுவாதீனத்தில் இருந்தால் அவைகள் கையகப்படுத்தப்பட்டு நிலமில்லாத ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போல ஏதாவது ஓரிடத்தில் அப்படியிருந்தாலும் அவைகளை அரசுக்கு—பூமிதான இயக்கத்தினுடைய வாரியத்திற்குத் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கிட்டத்திட்ட 9,000 பேருக்குக் கொடுக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அந்த சர்வோதயாவின் மூலமாகக் கொடுக்கப்பட்டாலும், அரசாங்கம் கொடுத்தாலும், அவர்களுக்குப் பட்டா கொடுக்காததினால், அரசாங்கத்திடமிருந்து பெற வேண்டிய கடன் உதவி, கிணறு மானியம் போன்றவைகளைப் பெற முடியாத அவல நிலை இருப்பதும், அது சம்பந்தமாக அரசுக்கு மனு

1981 பிப்ரவரி 10]

கொடுத்தும் இன்றுவரை ஒன்றும் நடைபெறாமல் இருக்கிறது என்பதும் அரசுக்குத் தெரியுமா, அதனைத் தீர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த பூமிதான இயக்கத்தின் நோக்கமே, நிலங்களை, ஏழைகள், இல்லாதவர்களுக்குக் கொடுப்பது என்பது மட்டுமல்ல. அதே நேரத்திலே வங்கிகளிடமிருந்தும், சங்கங்களிடமிருந்தும் கடன் பெற்று, அந்த நிலத்தைச் சீர்படுத்த வேண்டும். அதன்மூலமாக விவசாயம் செய்ய ஏற்புடையதாக ஆக்கி, கடன் தொகை வாங்கிக் கொடுக்கப்படுகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல அப்படிப்பட்ட நிலைமைகள் உருவாக்கப்படவில்லையென்றால், நிலைமைகள் சீர்திருத்தப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்கு சுமார் 9,000 பேர்களுக்கு நிலம் கொடுத்ததாகச் சொல்கிறார்கள். ஆளுக்கு எவ்வளவு நிலம் கொடுத்தார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே; ஒவ்வொருவருக்கும் ஆளுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தனியாக 9,000 பேருக்கும் சொல்ல வேண்டுமென்றால், பட்டியல் பெரிதாக இருக்கும். சராசரியாக, 1 ஏக்கர் 2 ஏக்கர் என்ற அளவில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பாலாற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 270—திரு. இல. பலராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆம்பூர் நகரிலிருந்து பேரணாம்பட்டு செல்லும் நெடுஞ்சாலையில் பாலாற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை.

திரு. ந. குலசேகர பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேம்பாலம் அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் இன்றியமையாத தேவையாகும். அது நீண்ட நாள் கோரிக்கையாகவும் இருந்து வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வந்தபொழுது,